5. அறிவிப்பு.

திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள்.

"அன்புடையீர்,

வணக்கம்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் உறுப்பினராகச் சேர்ந்துள்ளேன் என்பதை இதன் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பகுதியில் எனக்கு இடம் ஒதுக்குமாறு வேண்டுகின்றேன்."

திரு. நா. வீராசாமி : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, திரு. மதியழகன் அவர்கள் அ.தி.மு.க. வில் சேர்ந்து விட்டதாகவும், அவருக்கு இடம் ஒதுக்கும்படியும் கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்தீர்கள். அவர் சேர்ந்திருக்கிற அ.தி.மு.க. வின் தலைவர் இந்த மன்றத்தைப் பொறுத்த வரை அவரது கட்சியில் சேர்த்துக் கொண்டாரா என்பது பற்றிக் கடிதம் எழுதி இருக்கிறாரா ? அப்படி ஏதாவது வந்திருக்கிறதா ? அப்படி வரவில்லை என்றால் அதற்கு முன்னதாக அவருக்கு அவ்வாறு இடம் ஒதுக்குவது முறைதானா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டமன்ற அ. தி. மு. க. தலைவரிடமிருந்து இதுபற்றி இதுவரை கடிதம் வரவில்லை. இருந்தாலும் சட்டமன்ற அண்ணா தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இது குறித்து எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. என். கணபதி : அந்தக் கடிதம் வந்த பிறகுதான் அவருக்கு இடம் ஒதுக்கப்படுமா ? அல்லது அந்தக் கடிதத்திற்கு முன்னதாகவே இடம் ஒதுக்கப்பட்டு விடுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினராவார். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் வருவதை நாமெல்லாம் வரவேற்க வேண்டும். தலைவர் கடிதத்தை எதிர்பார்த்து அதற்கு முன்னதாகவே இடம் ஒதுக்குவதில் தவறு இல்லை.

1973 மார்ச் 10]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

74. Notification issued with G.O. Ms. No. 3101, Public (Services-A), dated the 1st December 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Workshop Foreman in the Cinchona Department within the Commissions' purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

B. Reports, Notifications and Other Papers

† 66. Housing in Tamil Nadu 1972-73. (English and Tamil).

† 67. Slum Clearance in Tamil Nadu 1972-73. (English and Tamil.)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

† Despatched to Members on 8th March 1973.